[1967 ஜூன் 23

திரு. கரு. சீமைச்சாமி : கிழக்கு இராமநாதபுரத்தில் இராமேசுவரம் தீவில் ஒரு சிமெண்டு தொழிற்சாலை ஆரம்பிப்பதாகச் சொல்லப்பட்டு, மறுபடியும் அது மற்ற ஜில்லாக்களுக்குப் போய் விடுகிறது. கிழக்கு இராமநாதபுரத்தில் இராமேசுவரம் தீவில் ஒரு தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் இனிமேலாவது ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதைப்பற்றிய விவரம் என்னிடம் இல்லை. தனியாக விவரத்தை எழுதி அனுப்பினால் ஆராய்ந்து என்ன செய்யலாம் என்று முடிவு செயயலாம்.

சிதம்பரம்—நடராசபுரம் சாலை

*57 வின.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மதிப்பிற்குரிய பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலுக்காவில், சிதம்பரம்—நடராஜபுரம், போகும் ரோட்டில் சிதம்பரநாதன் பேட்டை அருகிலுள்ள கலுங்கு மதகு பஸ் போக்குவரத்துக்கு அதிக இடைஞ்சலாக குறுகி இருப்பதனால் அதை இடித்துவிட்டு விஸ்தரிக்கும் உத்தேசம் உண்டா?

(இ) ஆம் எனில், எப்போது வேலை மேற்கொள்ளப்படும்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) பரிசீலிக்கப்படும்.

(இ) பரிசீலனை முடிந்ததும் வேலை மேற்கொள்ள முயற்சி எடுக்கப்படும்.

தமிழ்நாட்டில் வறட்சிப் பகுதிகள்

*58 திரு. கரு. சீமைச்சாமி :
திரு. ஆ. துரையரசன் : } மதிப்பிற்குரிய உணவு
திரு. வி. கே. கோதண்டராமன் :

வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு வறட்சிப் பகுதிகளை பார்வையிட குழு ஏதேனும் நியமித்ததா?

(இ) ஆம் என்றால், அக்குழுவின் அறிக்கை சபை முன் வைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) ஆம்.

(இ) ஆய்வுக்குழுவின் அறிக்கை இன்னும் முடிவு பெறவில்லை.

திரு. கரு. சீமைச்சாமி : கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தை பற்றி எல்லா அமைச்சர்களுக்கும் தெரியும். அது மானாவாரி பிரதேசம், வறட்சிப் பிரதேசம். நல்ல செழிப்புள்ள மாவட்டங்களாகிய தஞ்சை, கோவை போன்ற இடங்களில்தான் கிணறுகள் வெட்டுவது, மானியங்கள் கொடுப்பது போன்ற உதவிகள், மற்றக் காரியங்கள் செய்யப்படுகின்றன. பிற்பட்ட மாவட்டமாகிய